## பனிரெண்டாம் வகுப்பு தமிழ் தேர்வு - 7

1. பெண் சமுதாயத்தை எழுச்சியும், ஏற்றமும் கொண்ட தன்மானப் பறவைகளாக்க முனைந்தவர் __________
[A] பாரதியார் [B] பெரியார்
[C] பாரதிதாசன் [D] அண்ணா

2. பாடலாசிரியர் - "நா.முத்துகுமார்" பற்றி சரியானது
I. தங்க மீன்கள் படத்தில் இடம்பெற்ற "ஆனந்த யாழை மீட்டுகிறாய்" மற்றும் சைவம் படத்தில் "அழகே அழகே" பாடல்களுக்காக தேசிய விருது பெற்றவர்
II. நியூட்டனின் மூன்றாம் விதி (கவிதைத் தொகுப்பு)
III. கிராமம் நகரம் மாநகரம், பட்டாம்பூச்சி விற்பவன் (கவிதைத் தொகுப்பு)
IV.ஆனா ஆவண்ணா, என்னை சந்திக்க கனவில் வராதே, சில்க் சிட்டி, பாலகாண்டம், குழந்தைகள் நிறைந்த வீடு, வேடிக்கை பார்ப்பவன், அணிலாடும் மூன்றில் , பச்சையப்பனில் இருந்து ஒரு தமிழ் வணக்கம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்
[A] I,II,III,IV [B] I, II, III
[C] I, IV [D] I, III, IV

3. நாமக்கல்லார் படைத்த எந்த புதினம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சிங்களம், ஆகிய ஆறு மொழிகளில் திரைப்படமாக வெளிவந்துள்ளது
[A] மலைக்கள்ளன் [B] அவனும் அவளும்
[C] மாமன்மகள் [D] சங்கொலி

4. பின்வருவனவற்றுள் "புலவர் குழந்தை" எழுதாத நூல்
[A] நெருஞ்சிப்பழம் [B] இராவணகாவியம்
[C] காமஞ்சரி [D] அருட்செல்வம்

5. வயலுக்கு வரப்பொன்றும் வேண்டாம் என்றால் வளக்கரைகள் ஆற்றுக்கு வேண்டாம் என்றால் இயல் மொழிக்கு இலக்கணமும் வேண்டாம் பெண்ணே வரம்பில்லை என்றால் எம்மொழியும் அழிந்து போகும்
[A] சுரதா [B] முடியரசன்
[C] சுத்தானந்தபாரதியார் [D] பெருஞ்சித்திரனார்

6. "பெருஞ்சித்திரனார்" பற்றி சரியானதைத் தேர்க
I. இயற்பெயர் - துரை.மாணிக்கம்
II. இயற்றிய நூல்கள் - கொய்யாக்கனி, ஐயை, பாவியக்கொத்து, எண் சுவை என்பது, பள்ளிப்பறவைகள்
III. இதழ்கள் - தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம்
IV. சிறப்பு பெயர்கள் - கவிஞர் திலகம், தன்மானக்கவிஞர்
[A] I, III, IV
[B] I, II, III
[C] I, II, IV
[D] I, II, III, IV

7. தமிழ்நாட்டுத்தாகூர்"வாணிதாசன்" எழுதாத நூலைத்தேர்க
[A] பொன்மழை [B] எழிலோவியம்
[C] தொடுவானம் [D] பொங்கல் பரிசு

8. முதல் "குழந்தைக் களஞ்சியம்" - வெளிக்கொணர்ந்தவர்
[A] குமரகுருபரர் [B] கண்ணதாசன்
[C] தூரன் பெரியசாமி [D] பெரியாழ்வார்

9. கமகபிரியன் "கண்ணதாசன்" எழுதாத நூலைத்தேர்க
[A] ஞான-ராக-புபமாலிகா [B] ஊமையன் கோட்டை
[C] வேலங்குடி திருவிழா [D] காதலும் கடமையும்

10. ஓசை மிடுக்கும் மொழிநயமும் பாடல்களைப்படைத்தவர் திராவிட கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்,பொதுவுடமைக் கட்சியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர் யார் ?
[A] தமிழ் ஒளி [B] திரு.வி.கல்யானசுந்தரம்
[C] க.சச்சிதானந்தன் [D] சாலை.இளந்திரையன்

11. "சாலை இளந்திரையன்" பின்வருவனவற்றுள் தவறானது
[A] பிறப்பு - சாலை நயினார்பள்ளி வாசல்
[B] பெற்றோர் - இராமையா - அன்னலட்சுமி
[C] மனைவி - கனக சவுந்தரி
[D] ஈழகேசரி,வீரகேசரி,சுதந்திரன்இதழில் எழுதியுள்ளார்

12. "குழந்தை எழுத்தாளர் சங்கம்" நிறுவியவர் யார் ?
[A] காசி ஆனந்தன் [B] இளங்கண்ணன்
[C] அழ.வள்ளியப்பா [D] புலமைப்பித்தன்

13. "புல்லின் இதழ்கள்" எழுதியவர் "வால்ட்விட்மன்" புதுக் கவிதையை தழுவி பாரதியார் "காட்சிகள்" என்ற தலைப்பில் எழுதினார் அதற்கு அவர் வைத்தப்பெயர்
[A] மகான் [B] பாழ்நிலம்
[C] வசனகவிதைகள் [D] நகரம்

14. பின்வருவனவற்றுள் சரியானது எது / எவை
I. எழுத்து இதழை நடத்தியவர் - சி.சு செல்லப்பா
II. "நையாண்டி பாரதி" - என்பவர் வல்லிக்கண்ணன்
III. புதுமைப்பித்தன் இயற்பெயர் - விருத்தாசலம்
IV. ஈரோடு தமிழன்பன் இயற்பெயர்- விடிவெள்ளி
[A] I,II,III,IV [B] I, III, IV
[C] II, III, IV [D] I, II, III

15. "வால்ட்விட்மன்" அவர்களை "மகான்" என்று பாரதியார் எந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் __________
[A] காட்சிகள் [B] பாழ்நிலம்
[C] வசனகவிதைகள் [D] நகரம்

ARIVU TRUST

16. "புதுக்கவிதை இரட்டையர்கள்" யாரெனத் தேர்க ?
(அழைத்தவர் - வல்லிக்கண்ணன்)
[A] பாரதியார் & பாரதிதாசன்
[B] பாரதியார் & வால்ட்விட்மன்
[C] பாரதிதாசன் & இரசூல் கம்சதேவ்
[D] ந.பிச்சமூர்த்தி & கு.ப.இராசகோபால்

17. உண்மையும் உணர்ச்சியுமே இரு சிறகாய்க் கொண்டு கவிதை வானத்தில் சஞ்சரிக்க முன்வந்த முற்போக்கு கவிஞர்கள் யார் ? ______________________
[A] மணிக்கொடிக்காலம் [B] எழுத்துப்பரம்பரை
[C] வானம்பாடிக்காலம் [D] நாடகக்காலம்

18. "என்னைப்பொருத்த வரை இலக்கிய உப்பரிகைகளில் உலவுவதை விடச் சமுதாய நடை பாதைகளைச் செப்பனிடுவதையே முக்கியமாக கருதுகிறேன்" கூறியவர்
[A] மு.மேத்தா [B] தமிழ்நாடன்
[C] மீரா [D] புவியரசு

19. "ஏழு கார்டூன்களும் ஒரு வண்ண ஓவியமும்"
[A] மு.மேத்தா [B] தமிழ்நாடன்
[C] மீரா [D] புவியரசு

20. கீழ்கண்டவற்றுள் எது தவறாக உள்ளது
[A] உதயநிழல் - எஸ்.வைதீஸ்வரன்
[B] தோணி வருகிறது - புவியரசு
[C] அம்மா அம்மா - தமிழ்நாடன்
[D] விலை மகளிர் - காமராசன்

21. "சிற்பி பாலசுப்ரமணியம்" - சாகித்ய அகாதெமி பரிசுப்பெற்ற இரு நூல்கள் யாவை ______________
[A] ஒரு கிராமத்து நதி & அக்கினி சாட்சி
[B] ஒரு கிராமத்து நதி & லலிதாம்பிகா அந்தர் ஜனம்
[C] ஒரு கிராமத்து நதி & சர்ப்பயாகம்
[D] ஒரு கிராமத்து நதி & பாலசுப்ரமணியம் கவிதைகள்

22. "கவிக்கோ அப்துல்ரகுமான்" தனது எழுதுகோலை ஆறாவது விரலாகப் பெற்ற இவர்தம் ஏழாவது கவிதை தொகுப்பு என்ன ? (சாகித்ய அகாதெமி பரிசுபெற்றது)
[A] பால்வீதி [B] ஆலாபனை
[C] தீபங்கள் எரியட்டும் [D] புதுக்கவிதையில் குறியீடு

23. வைரமுத்து அவர்களின் சாகித்ய அகாதெமி பரிசுபெற்றது
[A] கள்ளிக்காட்டு இதிகாசம் [B] கவிராசன் கதை
[C] இன்னொரு தேசிய கீதம்
[D] மூன்றாம் உலகப்போர்

24. "கலாப்ரியா" இயற்பெயர் என்ன ?
[A] கல்யாணசுந்தரம் [B] ரங்கநாதன்
[C] சுந்தரராமசாமி [D] சோமசுந்தரம்

25. பொருத்துக :
[A] இங்கிலாந்து தேச சரித்திரம் - எல்லீஸ்துரை
[B] தாமரைத்தடாகம் - கால்டுவெல்
[C] ஞநஸ்நானம் - கால்டுவெல்
[D] வீரமாமுனிவர் வரலாறு - ஜி.யு.போப்
[A] 3 4 2 1 [B] 4 2 3 1
[C] 2 3 4 1 [D] 4 3 1 2

26. பின்வருவனவற்றுள் தவறானது (ஆறுமுக நாவலர்)
[A] "நாவலர்"- திருவாவடுதுறை ஆதினத்தால் வழங்கல்
[B] "வசனநடை கைவந்த வள்ளலார்"பரிதிமாற்கலைஞர்
[C] முற்கால தமிழ் உரைநடையின் தந்தை
[D] வைதாலும் வழுவின்றி வைவார்சி.வை.தாமோதரம்

27. "இராமலிங்க அடிகளார்" உரைநடை நூல்கலல்லாதது
[A] மனுமுறை கண்ட வாசகம்
[B] ஜீவகாருணிய ஒழுக்கம்
[C] உண்மை நெறி விளக்கம்
[D] இயற்கைச் செல்வங்கள்

28. பின்வருவனவற்றுள் தவறானது எது ?
I. மண்ணியல் சிறுதேர் - கதிரேசஞ்செட்டியார்
II. புதியதும் பழையதும் - உ.வே.சாமிநாதன்
III. கோகிலாம்பாள் கடிதங்கள் - மறைமலையடிகள்
IV. தேசபக்தன், நவசக்தி - திரு.வி.க
[A] I [B] II
[C] III [D] எதுவுமில்லை

29. ரா.பி.சேதுப்பிள்ளையின் சாகித்ய அகாதெமி பரிசுபெற்றது
[A] செந்தமிழும் கொடுந்தமிழும் [B] தமிழின்பம்
[C] தமிழ்விருந்து [D] வீரமாநகர்

30. பின்வருவனவற்றுள் பொருத்தமற்றது
[A] குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை - வ.வே.சு
[B] புனர்ஜென்மம், காணாமலே காதல் கு.ப.ராஜகோபால்
[C] திருடன் மகன் திருடன் - நா.பிச்சமூர்த்தி
[D] சேற்றிலே மலர்ந்த செந்தாமரை - சிதம்பரரகுநாதன்

31. பொருத்துக :
[A] காந்தி மகான் கதை - கண்ணதாசன்
[B] சேரமான் காதலி - கே.சி.எஸ். அருணாசலம்
[C] அன்னையின் கூத்து - அப்துல்ரகுமான்
[D] பால்வீதி - கொத்தமங்கலம் சுப்பு
[A] 2 1 4 3 [B] 4 1 2 3
[C] 3 1 2 4 [D] 4 3 1 2

32. "படுத்திருக்கும் வினாக்குறி மேல் மீசை வைத்த பாண்டியர்கள்" புதிய உவமையில் படம்பிடித்தவர்
[A] கண்ணதாசன் [B] நாமக்கல்லார்
[C] திரு.வி.க [D] சுரதா

ARIVU TRUST

**33.** பொருத்துக :

(1) புத்தகசாலை - சுரதா
(2) தீக்குச்சிகள் - வாணிதாசன்
(3) சிக்கனம் - பாரதிதாசன்
(4) காடு - அப்துல்ரகுமான்

[A] 4 3 1 2 [B] 3 4 1 2
[C] 4 2 3 1 [D] 2 1 4 3

**34.** "செந்தமிழ் காவலர்"

[A] பாரதிதாசன் [B] பாரதியார்
[C] வாணிதாசன் [D] சுரதா

**35.** பொருத்துக :

[1] குயில்பாட்டு - ஜெயமோகன்
[2] அழகின்சிரிப்பு - சுரதா
[3] துறைமுகம் - பாரதியார்
[4] ரப்பர் - பாரதிதாசன்
[5] புதியவிடியல்கள் - தாராபாரதி

[A] 3 4 2 1 5 [B] 1 2 3 4 5
[C] 3 2 1 4 5 [D] 2 3 4 5 1

**36.** மு.மேத்தாவின் சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற நூல்

[A] ஊர்வலம் [B] மனச்சிறகு
[C] ஆகாயத்துக்கு அடுத்த வீடு [D] கண்ணீர் பூக்கள்

**37.** "ஹைக்கூ" கவிதைகளின் நோக்கம் என்ன ______
"திருக்குறள்" நீதிநூலின் நோக்கம் என்ன ______

[A] சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்
[B] வரலாற்று செய்திகளை கூறுகிறது
[C] பழங்கால வேளாண்மை முறையை கூறுகிறது
[D] சங்ககால வேதம் மற்றும் சடங்குகளை பற்றியது

**38.** கீழ்கண்டவற்றுள் சரியானதைத் தேர்க

[A] கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவிபாடும்
[B] கம்பன் வீட்டுக் கட்டு தறியும் கவிபாடும்
[C] கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவிப்பாடும்
[D] கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்

**39.** கீழ்கொடுக்கப்பட்டவற்றுள் யார் எனத் தேர்க

I.தெலுங்கையும் வடமொழியையும் நன்கு அறிந்தவர்
II.விரைந்து கவிபாடுவதில் வல்லவர்
III.கரந்தை தமிழ்ச்சங்கத்தில்'ஆசிரியர்'பட்டம் பெற்றவர்
IV.கற்றோரால் புலவரேறு எனச் சிறப்பிக்கப்படுகிறார்

[A] ஒட்டக்கூத்தர் [B] பரணர்
[C] வரதநஞ்சையப்பிள்ளை [D] பாவாணர்

**40.** "நல்ல" என்னும் அடைமொழி உடைய அகநூல்

[A] நற்றிணை [B] குறுந்தொகை
[C] அகநானூறு [D] புறநானூறு

**41.** புறநானூற்றின் கண் அமைந்த துறைகள் ______

[A] 120 [B] 180
[C] 100 [D] 65

**42.** எட்டுத்தொகை நூல்களுள் பொருத்தமற்றது

[A] கலித்தொகை [B] நற்றிணை
[C] நான்மணிக்கடிகை [D] குறுந்தொகை

**43.** அகநானூற்றில் 10, 20 என வருவன ______

[A] பாலை [B] நெய்தல்
[C] குறிஞ்சி [D] முல்லை

**44.** "சத்திமுத்தப்புலவர் நாடகத்தை" தமிழுக்கு கொடையாக வழங்கிய புரட்சிக் கவிஞர் ______

[A] பாரதியார் [B] பாரதிதாசன்
[C] வாணிதாசன் [D] சுரதா

**45.** பொருத்துக :

[A] நற்றிணை (1) தெரியவில்லை
[B] குறுந்தொகை (2) நல்லன்துவனார்
[C] ஐங்குறுநூறு (3) பூரிக்கோ
[D] கலித்தொகை (4) கூடலூர்கிழார்

[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 3 4 1 2 [D] 1 2 3 4

**46.** கீழ்கண்டவற்றுள் சரியானதைத் தேர்க "அகநானூறு"

I. 401 அகவற்பாக்களால் ஆனது
II. அகம்,அகப்பாட்டு,நெடுந்தொகை, அழைக்கப்படுகிறது
III. மூன்று பிரிவுகளைக் கொண்டது
IV. தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

[A] I, தவறு II, III, IV சரி
[B] I, II, மற்றும் III, IV சரி
[C] I, II, தவறு III, IV சரி
[D] I, II, III, மற்றும் IV தவறு

**47.** "புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி நெடுந்தேர்"

[A] வினைத்தொகை [B] வினைமுற்று
[C] ஒரு பொருட்பன்மொழி [D] உரிச்சொற்றொடர்

**48.** கீழ்கண்டவற்றுள் எது / எவை தவறானது

[A] மாச்சிறைப்பறவை - வௌவால்
[B] கதுப்பு - பாக்குமரம்
[C] கடிமகள் - மணமகள்
[D] முதுமரம் - பழையமரம்

**49.** கீழ்கொடுக்கப்பட்டுள்ள கருப்பொருளில் தவறானது

[A] குறிஞ்சி - சுனைநீர், அருவிநீர்
[B] மருதம் - காட்டாறு
[C] முல்லை - கான்யாறு
[D] பாலை - உவர்க்கழி
[E] நெய்தல் - நீர் வற்றிய சுனை

ARIVU TRUST

50. புறத்திணைகள் -12, அகத்திணை -7 இவற்றில் இடம் பெறாத செய்திகள் எத்தினையில் உள்ளது
[A] பொதுவியல் [B] வெட்சி
[C] பெருந்திணை [D] பாடாண்

51. இறவுப்புறம், சுறவுக்கோடு, களிற்று மருப்பு, என்பது
[A] 2 - ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க
[B] ஆறாம் வேற்றுமைத் தொகைகள்
[C] ஏழாம் வேற்றுமைத் தொகை
[D] நான்காம் வேற்றுமைத்தொகை

52. "மணிப்பிரவாளநடை" என்பது ______________
[A] தமிழும் சமஸ்கிருதமும் கலந்து எழுதுவது
[B] தமிழும் உருதும் கலந்து எழுதுவது
[C] தமிழும் தெலுங்கும் கலந்து எழுதுவது
[D] அனைத்தும்

53. கீழ்கண்டவற்றுள் இசைநிறையளபெடையைத் தேர்க
[A] எடுப்பதூஉம் [B] செலீஇய
[C] எங்ஙனம் [D] படூஉம்

54. "சின்னாள்" - பிரித்து எழுதுக
[A] சி + நாள்
[B] சில + நாள்
[C] சின்ன + நாள்
[D] சிறுமை + நாள்

55. நற்றிணைப் பாக்களின் அடி வரையறை
[A] 4 அடி முதல் 8 அடி வரை
[B] 13 அடி முதல் 31 அடி வரை
[C] 3 அடி முதல் 6 அடி வரை
[D] 9 அடி முதல் 12 அடி வரை

56. "ஆந்தை" இலக்கணம் தருக
[A] பொருட்பெயர் [B] சினைப்பெயர்
[C] மரூஉ மொழி [D] பண்புத்தொகை

57. "கருங்காக்கை" என்பதற்கு சரியான இலக்கணம்
[A] ஆறாம் வேற்றுமை
[B] 2 - ம் வேற்றுமை
[C] ஏழன்தொகை
[D] பண்புத்தொகை

58. "தான் வேண்டியவை நிறைவேறுமானால் இன்னது படைப்பேன்" - என்று வேண்டிக்கொள்ளுதல்
[A] பலிக்கடன்
[B] பாராய்க்கடன்
[C] உடன்போக்கு
[D] கடமைக்கடன்

59. கூற்று : [A] அஞ்சிலோதி
காரணம் : [R] அம் + சில + ஓதி = அஞ்சிலோதி அழகிய சிலவாகிய கூந்தல் என்பது பொருள், சில பொருட்களை சிறப்பிக்கும் பொருட்டு கவிஞர்கள் உருவகங்களையும் உவமையையும் ஏற்றி கூறுவர்
[A] [A] சரி [A] க்கு [R] சரியான விளக்கம்
[B] [A] சரி [R] சரி [A]க்கு [R] சரியான விளக்கமல்ல
[C] [A] சரி [R] சரி [D] [A] தவறு [R] சரி

60. பழகு தமிழ்ச் சொல்லருமை "நாலிரண்டில்" இதில் 'நால்' என்பது எந்த நூலைக் குறிக்கிறது
[A] கம்பராமாயணம் [B] நாலடியார்
[C] திருக்குறள் [D] B & C

61. கீழ்கண்ட சொற்பொருளில் தவறான இணை
[A] வையகம் - மண்ணுலகம்
[B] வானகம் - விண்ணுலகம்
[C] ஞாலம் - நிலவுலகம்
[D] தினை - மிகப்பெரிய அளவு

62. "லைட் ஆப் ஏசியா " ஆசிரியர்
[A] கவிமணி [B] ஜான்பன்யன்
[C] எட்வின் அர்னால்ட் [D] லிட்டன் பிரபு

63. மறவற்க மாசற்றார் <u>கேண்மை</u> துறவற்க துன்பத்துள் துப்பாயார் நட்பு - இலக்கணம் காண்க
[A] பண்புத்தொகை [B] தொழிற்பெயர்
[C] சினைப்பெயர் [D] மரூஉ

64. கீழ்கொடுத்துள்ள இலக்கணக் குறிப்பில் தவறானது
[A] செய்யாமல் - வினையெச்சம்
[B] வையகமும் வானகமும் - எண்ணும்மை
[C] துறவற்க - எதிர்மறை வியங்கோள் வினைமுற்று
[D] கொன்றார் - வினையாலணையும் பெயர்

65. கீழ்கண்டவற்றுள் பொருந்தாதது (உரிப்பொருள்)
[A] குறிஞ்சி - காடும் காடு சார்ந்த இடமும்
[B] முல்லை - இருத்தலும் இருத்தல்நிமித்தமும்
[C] மருதம் - ஊடலும் ஊடல் நிமித்தமும்
[D] நெய்தல் - இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
[E] பாலை - பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

66. "வாழ்வினிற் செம்மையைச் செய்பவள் நீயே" என்ற பாடலைத் தமிழ்தாய் வாழ்த்தாக ஏற்றுக்கொண்டது
[A] தமிழ்நாட்டு அரசு
[B] புதுவை அரசு
[C] பிரஞ்சு அரசு
[D] எதுவுமில்லை

ARIVU TRUST

67. தமிழ்நாட்டின் 'ஷெல்லிதாசன்'
[A] பாரதியார் [B] பாரதிதாசன்
[C] அண்ணா [D] வாணிதாசன்

68. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்" தமிழை உலகறியச் செய்தவர்
[A] பாரதியார் [B] பாரதிதாசன்
[C] கம்பர் [D] பாவாணர்

69. ஆன்மீகவிடுதலை,பெண்விடுதலை,சமுதாயவிடுதலை நாட்டு விடுதலையை விழைந்த விடுதலைக் கவிஞர்
[A] இராமலிங்கம் [B] தேவர்
[C] முடியரசன் [D] பாரதிதாசன்

70. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து - அணியைத் தேர்க
[A] சொல்பின்வரு நிலையணி
[B] சொற்பொருட் பின்வரு நிலையணி
[C] உதவி என்னும் சொல் வந்துள்ளதால் உருவகஅணி
[D] பொருட்பின்வரு நிலையணி

71. 'வினையாலணையும் பெயர்' தவறானது
[A] நீங்காமை [B] ஒறுத்தார்
[C] நோற்கிற்பவர் [D] செய்தாரை

72. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள்
[A] 8 இயல்கள் [B] 9 இயல்கள்
[C] 4 இயல்கள் [D] 3 இயல்கள்

73. உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய் மொழி மாண்பு
[A] இனைமோனை [B] பொழிப்புமோனை
[C] முற்றுமோனை [D] கூழைமோனை

74. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளை இயற்றிய சேர இளவரசர், (கோ,வேந்தன்,மன்னன்) யார் ?
[A] செங்குட்டுவன் [B] இளங்கோவடிகள்
[C] கரிகாலன் [D] நெடுஞ்செழியன்

75. சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற ஆயர்குலத்தை சேர்ந்தவர் யார் எனக் காண்க ____________
[A] கண்ணகி [B] மாதவி
[C] கவுந்தியடிகள் [D] மாதரி

76. கீழ்கண்டவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடு
[A] என் கணவன் கள்வன் அல்ல
[B] என் கணவன் கள்வன் அன்று
[C] என் கணவன் கள்வனல்லன்
[D] என் கணவன் கள்வனா

77. இலக்கணக் குறிப்பில் பொருந்தாத ஒன்று
[A] ஈன்ற குழவி - வினைத்தொகை
[B] வைவாள் - உரிச்சொற்றொடர்
[C] நிறைமதி - வினைத்தொகை
[D] தண்குடை - பண்புத்தொகை

78. கம்பராமாயணத்தில் இடம்பெற்ற "அசோகவனம்" எங்கு உள்ளது ____________
[A] இலங்கை [B] ராமேஸ்வரம்
[C] உத்திரபிரதேசம் [D] காஷ்மீர்

79. <u>வினைத்தொகையில்</u> பொருத்தமற்றது
[A] மொய்கழல் [B] களிநடம்
[C] கைத்தலம் [D] அலைகடல்

80. <u>கொன்ஸ்டான்</u> இத்தாலி மொழிச்சொல்லுக்கு தமிழில்
[A] அஞ்சாமை [B] அறிவுடையவர்
[C] பக்தியுடையவர் [D] பற்றுடையவர்

81. திருக்குறளின் <u>அறத்துப்பால், பொருட்பால்</u> ஆகிய (108) அதிகாரங்களை வீரமாமுனிவர் எம்மொழியில் மொழிப்பெயர்த்தார் ____________
[A] ஆங்கிலம் [B] இலத்தீன்
[C] ஈப்ரு [D] கிரேக்கம்

82. பொருத்துக :

| நூல்கள் | புலவர்கள் |
|---|---|
| [I] இருண்டவீடு | (1) கம்பர் |
| [II] தேம்பாவணி | (2) திருவள்ளுவர் |
| [III] கம்பராமாயணம் | (3) பாரதிதாசன் |
| [IV] திருக்குறள் | (4) வீரமாமுனிவர் |

[A] 4 3 2 1
[B] 1 2 3 4
[C] 3 4 1 2
[D] 3 4 2 1

83. பாவேந்தர் பாரதிதாசன் முழக்கங்களில் தவறானது
[A] தமிழுக்கும் அமுதென்று பேர் !
[B] சங்கே முழங்கு !
[C] தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ....
[D] உள்ளே தொட்டால் உசிரில் இனிக்கும் !

84. "அஷ்டபிரபந்தம் கற்றவன் அரை பண்டிதன்" என்னும் பழமொழிக்கு ஏற்ப உயர்ந்ததாகக் கருதப்படுவது
[A] அற்புதத்திருவந்தாதி
[B] திருத்தொண்டர் திருவந்தாதி
[C] திருவேங்கடத்தந்தாதி
[D] பெரிய திருவந்தாதி

ARIVU TRUST

**85.** "இருக்கு ஆரணம்"- சரியான இலக்கணம் தருக
[A] எதிர்மறை வினையெச்சம்
[B] எதிர்மறை பெயரெச்சம்
[C] இருபெயரொட்டுப் பண்புத்தொகை
[D] ஒருபொருட் பன்மொழி

**86.** கீழ்கண்டவற்றுள் சரியானதைத் தேர்க

| | திண்மை | தின்மை | வண்மை |
|---|---|---|---|
| [A] | வலிமை | தீமை | வளம் |
| [B] | மென்மை | கெடுதல் | கொடை |
| [C] | சுமை | தீயவன் | வலம் |
| [D] | வலிமை | கொடுமை | பளு |

**87.** "கொள்கை இல்லாத அரசியல், உழைப்பு இல்லாத செல்வம்", "ஒழுக்கம் இல்லாத கல்வி, மனசாட்சி இல்லாத மகிழ்ச்சி" யாருடைய கருத்து
[A] மறைமலையடிகள் [B] மகாத்மாகாந்தி
[C] பெரியார் [D] மு.வரதராசனார்

**88.** தென்மோடி, வடமோடி, மகுடி, நாட்டை, எனும் கூத்து ஆட்ட வகைகள் எந்த நாட்டில் நடைபெற்றது
[A] மலேசியா [B] சிங்கப்பூர்
[C] இலங்கை [D] பினாங்குத்தீவு

**89.** மலேசியாவின் முதல் சிறுகதை எது ?
[A] நவரச கதா மஞ்சரி
[B] கோகுல விலாசம்
[C] கதிர்வேலு கங்காணி ஆன கதை
[D] கடைசிப் பந்தியின் கண்ணீர்

**90.** செட்டிநாட்டார் வீடுகளில் எவ்வகை சிற்பக்கலைஉள்ளது
[A] ஓவியக்கலை [B] மரச்சிற்பக்கலை
[C] தந்தசிற்பக்கலை [D] செப்புப்படிமக்கலை

**91.** தமிழகத்தில் இன்று காணப்படும் குடைவரைக்கோயிலில் மிகவும் பழைமையானது (பாண்டியர் காலத்தவை)
[A] கழுகுமலை [B] பனைமலை
[C] மாமல்லபுரம் [D] பிள்ளையார்பட்டி

**92.** இராமாயணக் காட்சிகளையும், சிவபுராணக்காட்சி, தேர்ந்தெடுத்துச் கற்களில் செதுக்கும் சிற்பம் ________
[A] புடைப்புச்சிற்பம் [B] செப்புத்திருமேனி
[C] சிற்பக்கலை [D] ஓவியக்கலை

**93.** ஒரு சிறந்த ஓவியனாக திகழ்ந்த "மகேந்திரவர்மன்"
[A] சேரமன்னன் [B] சோழமன்னன்
[C] பாண்டியமன்னன் [D] பல்லவமன்னன்

**94.** "யோகம் பயின்று அறிவு பெற்றவர்கள்"
[A] ஆழ்வார்கள் [B] சித்தர்கள்
[C] நாயன்மார்கள் [D] சமணர்கள்

**95.** புதினம், புளிய மரமென்றால் ; சிறுகதை தென்னை மரம் என்று கூறியவர்
[A] குருசாமி [B] இராஜாஜி
[C] இலக்குவனார் [D] சுந்தரமூர்த்தி

**96.** பின்வரும் ஒலி வேறுபாட்டில் சரியானதைத் தேர்க

| | வாலை | வாழை | வாளை |
|---|---|---|---|
| [A] | மீன் | வாழ்வு | இளம்பெண் |
| [B] | இளம்பெண் | கொடி | மீன் |
| [C] | இளம்பெண் | மரம் | மீன் |
| [D] | மீன் | மரம் | இளம்பெண் |

**97.** கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது
[A] பகடு நடந்த கூழ் - நாலடியார்
[B] வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் - சம்மந்தர்
[C] கோவ னிரை மீட்டனன் - தொல்காப்பியம்
[D] நின்கோ வரினு மிங்கே - கலித்தொகை

**98.** பொருத்துக :
[A] யாழினும் நன்மொழியால் - மதுரவசனி
[B] தேன்மொழிப்பாவை - வீணாமதுரபாஷினி
[C] அறம்வளர்த்தால் - இயற்கை அறிவு
[D] எரிசினக்கொற்றவை - ரௌத்திரதுர்க்கை
[A] 2 1 4 3 [B] 3 1 2 4
[C] 2 1 3 4 [D] 2 3 4 1

**99.** பொருத்துக :
[A] தெற்காசியாவின் சாக்ரடிஸ் (1) வெங்கடரமணி
[B] தென்னாட்டு தாகூர் (2) அண்ணாதுரை
[C] தென்னாட்டு போஸ் (3) ஈ.வே.ராமசாமி
[D] தென்னாட்டு பெர்னாட்சா (4) தேவர்
[A] 1 3 2 4
[B] 3 1 4 2
[C] 3 4 1 2
[D] 1 2 3 4

**100.** கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றதைத் தேர்க
I.தொல்காப்பியம் -அதிகாரம்-3 இயல்கள்-27 பாக்கள்1610
II.சீறாப்புராணம் - காண்டம்-3 படலம்-92 பாடல்கள்-5027
III.சிலப்பதிகாரம் - காண்டம்-3 காதை-30 பாடல்கள்-5001
IV.சீவகசிந்தாமணி - இலம்பகம்-13 பாடல்கள்- 3145
[A] I [B] II
[C] III [D] எதுவுமில்லை

ARIVU TRUST

**ஞாயிறு மாலை "மாதிரித் தேர்வு" (200)
வினாக்கள் கொண்ட வினாத்தாள்
பதிவேற்றம் செய்யப்படும்.,**

## (12th STD – TAMIL - ANSWER KEY)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| A | A | A | D | B | B | A | C | D | A |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| D | C | C | A | D | D | C | C | B | B |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| A | B | A | D | B | C | D | D | B | C |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| B | D | B | A | A | C | A | D | C | B |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| D | C | B | B | B | A | C | B | C | A |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| B | A | D | B | D | C | D | B | A | B |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| D | C | B | A | A | B | A | A | A | B |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| A | B | C | B | D | C | A | A | C | A |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| B | C | C | C | C | A | B | C | A | B |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| D | A | D | B | B | C | C | C | B | D |

ARIVU TRUST

ARIVU TRUST